# குளித்தலை நகராட்சி

20.03.2018.ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணியளவில் நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற அவசரக்கூட்டம்

ஆணையர் மற்றும் தனி அலுவலர்
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்– 01. குளித்தலை நகராட்சிக்கு சொந்தமான மூன்றாண்டு உரிம இனங்கள் (5 இனங்கள்) 31.03.2018.ல் முடிவடைவதால் 31.01.2018, 21.02.2018, 07.03.2018 ஆகிய தேதிகளில் கீழ்க்கண்ட விபரப்படி பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. மேற்படி ஏலத்தில் வைப்புத் தொகையினை செலுத்தி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி யாரும் கோரவில்லை. எனவே, பகிரங்க 4.வது மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | உரிமையாணை இன விபரம் | முதல் ஆண்டுக்கான முதல் பொறுப்பு தொகை | தேவையான சால்வன்சி | சொத்துமதிப்பு இல்லாதவர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்பு தொகை |
|---|---|---|---|---|
| 1) | பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகள் மற்றும் ஆட்டோ முதலிய வாகனங்களுக்கு நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | ரூ.5,00,000/– | ரூ.12,00,000/– | ரூ.5,00,000/– |
| 2) | 2சக்கர ஊர்திகள் நிறுத்துமிடம் | ரூ.3,00,000/– | ரூ.5,00,000/– | ரூ.3,00,000/– |
| 3) | தினசரி சாலை ஓரக்கடைகளில் வசூல் செய்துகொள்ளும் உரிமம் | ரூ.5,00,000/– | ரூ.15,00,000/– | ரூ.5,00,000/– |
| 4) | ஆடு அடிக்கும் தொட்டி கட்டணம் வசூல் உரிமம் | ரூ.75,000/– | ரூ.1,50,000/– | ரூ.75,000/– |

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட இனங்கள் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரதபட்சத்தில், துறைமூலம் வசூல் செய்யலாம். அதற்கான டிக்கட் புக்குகள், தேவைக்கேற்ப திருச்சி தமிழ்நாடு மல்ட்டி பர்பஸ் இன்போ சர்வீஸ் கூட்டுறவு அச்சகம்மூலம் அச்சிட்ட பெறவும், அதற்காகும் செலவினங்களுக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.3166/2017/அ1)

பொருள்– 02. இந்நகராட்சிக்கு சொந்தமான (2018–2021 ஆண்டுக்கான உரிமம்) ஆடு அடிக்கும் தொட்டி கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 2018–2019.ஆம் ஆண்டிற்கு 31.03.2018, 21.02.2018, 07.03.2018 மற்றும் 16.03.2018 ஆகிய தேதிகளில் நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் 16.03.2018 அன்று பொது ஏலத்தில் கீழ்க்கண்டவாறு ஓராண்டிற்கு உச்ச ஏலக்கேள்வி கோரியதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பெயர் / முகவரி | ஓராண்டு உச்சக்கேள்வி |
|---|---|---|
| 1) | திரு.A.முருகானந்தம், 3,சேதுரத்தினம்பிள்ளைதெரு, குளித்தலை. | ரூ.65,500/– |
| 2) | திரு.M.மகாலிங்கம், த/பெ.மாணிக்கம்பிள்ளை, 36–1, மேலஅக்ரஹாரம், கிருஷ்ணராயபுரம். | ரூ.66,000/– |

அலுவலக குறிப்பு– மேற்காணும் இனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரவில்லை. மேலும், உயர்ந்தபட்ச ஓராண்டிற்கு ஏலக்கேள்வியாக திரு.M.மகாலிங்கம் என்பவர் ரூ.66,000/–க்கு கேட்டுள்ளார். இது சென்ற ஆண்டு உரிமத் தொகைவிட ரூ.4260/– மற்றும் மூன்று ஆண்டு சராசரி உரிமத்தொகை காட்டிலும் ரூ.7153/– கூடுதலாக உள்ளது. திரு.M.மகாலிங்கம் என்பவரது உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியை ஊர்ஜிதம் செய்யலாம்.
(ந.க.எண்.3166/2017/அ1)

பொருள்– 03. இந்நகராட்சிக்கு சொந்தமான (2018–2021 ஆண்டுக்கான உரிமம்) தினசரி சாலை ஓரக்கடைகளில் வசூல் செய்துகொள்ளும் உரிமத்திற்கு 2018–2019.ஆம் ஆண்டிற்கு 31.01.2018, 21.02.2018, 07.03.2018 மற்றும் 16.03.2018 ஆகிய தேதிகளில் நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் ஏலத்தில் யாரும் கேள்வி கேட்கவில்லை. 16.03.2018.ல் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பெயர் / முகவரி | ஓராண்டு உச்ச ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|
| 1) | திரு.S.மணிகண்டன், 270C, 3rdதெரு, அண்ணாநகர், குளித்தலை. | ரூ.12,22,222/– |
| 2) | திரு.V.கண்ணன், த/பெ.P.வீரமலை, புதுப்பாளையம், வைகநல்லூர்–PO. | ரூ.13,25,000/– |

அலுவலக குறிப்பு– மேற்காணும் இனத்திற்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி திரு.V.கண்ணன் என்பவர், ரூ.13,25,000/–க்கு கொடுத்துள்ளார். இது சென்ற ஆண்டு உரிமத்தொகைவிட ரூ.2,68,701/– மற்றும் மூன்று ஆண்டு ஏலக்கேள்வியை காட்டிலும் ரூ.2,69,923/– கூடுதலாக உள்ளது. திரு.V.கண்ணன் என்பவரது உயர்ந்த ஒப்பந்தப்புள்ளியை ஊர்ஜிதம் செய்யலாம்.
(ந.க.எண்.3166/2017/அ1)

பொருள்– 04. இந்நகராட்சிக்கு சொந்தமான (2018–2021 ஆண்டுக்கான உரிமம்) பேருந்து நிலைய இரு சக்கர ஊர்திகள் நிறுத்துமிடம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 2018–2019ம் ஆண்டிற்கு 31.01.2018, 21.02.2018, 07.03.2018 மற்றும் 16.03.2018 ஆகிய தேதிகளில் நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் 16.03.2018 அன்று பொது ஏலத்தில் கீழ்க்கண்டவாறு ஓராண்டிற்கு உச்ச ஏலக்கேள்வி கோரியதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பெயர் / முகவரி | ஓராண்டு உச்சகேள்வி |
|---|---|---|
| 1) | திரு.S.மாதேஸ்வரன், த/பெ.M.சண்முகம்,<br>2A, செங்குந்தர்நகர், வெங்கமேடு, கரூர். | ரூ.3,85,000/– |
| 2) | திருமதி.V.சாந்தி, 76,வெள்ளார்தெரு, உமையாள்புரம், முசிறி | ரூ.3,86,000/– |

அலுவலக குறிப்பு– மேற்காணும் இனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரவில்லை. மேலும், உயர்ந்தபட்ச ஓராண்டிற்கு ஏலக்கேள்வியாக திருமதி.V.சாந்தி என்பவர் ரூ.3,86,000/–க்கு கேட்டுள்ளார். இது சென்ற ஆண்டு உரிமத் தொகைவிட ரூ.1,20,250/– மற்றும் மூன்று ஆண்டு சராசரி உரிமத்தொகை காட்டிலும் ரூ.71,322/– குறைவாக உள்ளது. பேருந்து நிலையத்திற்கு அருகில் தனியாரால் இருசக்கர வாகன நிறுத்துமிடம் துவங்கப்பட்டு செயல்பட்டு வருவதால், இருசக்கர வாகன நிறுத்துமிடத்தில் வாகன வருகை குறைந்துள்ளது. இருப்பினும், இலாகாமூலம் வசூல் செய்தால், ரசீது அச்சு கூலி ரூ.30,000/–, வசூல் செய்ய 3 பணியாளர்களுக்கு ஒரு பணியாளருக்கு ரூ.356x3x365 ரூ.3,89,820/–, மின்கட்டணம் ரூ.18,000/–, வருடத்திற்கு மொத்தம் ரூ.4,37,820/– செலவு ஆகும். மேலும், நகராட்சி நிதி இழப்பு ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் மேற்கண்ட செலவினங்களை கருத்தில்கொண்டும், இந்நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லை என்பதால், இலாகாமூலம் வசூல் செய்வதை தவிர்த்து, மேற்படி செலவினங்கள் இன்றி நகராட்சிக்கு நேரடியாக வருவாய் ஈட்டும் வகையில் மேற்படி திருமதி.V.சாந்தி என்பவரின் உச்ச கேள்வியான ரூ.3,86,000/–த்தை மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண்.3166/2017/அ1)

பொருள்– 05. இந்நகராட்சிக்கு சொந்தமான (2018–2021 ஆண்டுக்கான உரிமம்) பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்து, கார் மற்றும் ஆட்டோ முதலிய வாகனங்களுக்கு நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 2018–2019ம் ஆண்டிற்கு 31.01.2018, 21.02.2018, 07.03.2018 மற்றும் 16.03.2018 ஆகிய தேதிகளில் நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் 16.03.2018 அன்று பொது ஏலத்தில் கீழ்க்கண்டவாறு ஓராண்டிற்கு உச்ச ஏலக்கேள்வி கோரியதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பெயர் / முகவரி | ஓராண்டு உச்சகேள்வி |
|---|---|---|
| 1) | திரு.S.மாதேஸ்வரன், த/பெ.M.சண்முகம்,<br>2A, செங்குந்தர்நகர், வெங்கமேடு, கரூர். | ரூ.3,75,000/– |
| 2) | திருமதி.R.விஜயலட்சுமி, க/பெ.க.இராமலிங்கம்,<br>க.எண்.10, ராமானுஜநகர், கரூர். | ரூ.3,78,000/– |

..3..

அலுவலக குறிப்பு– மேற்காணும் இனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரவில்லை. மேலும், உயர்ந்தபட்ச ஓராண்டிற்கு ஏலக்கேள்வியாக திருமதி.R.விஜயலட்சுமி என்பவர் ரூ.3,78,000/–க்கு கேட்டுள்ளார். இது சென்ற ஆண்டு உரிமத்தொகைவிட ரூ.1,18,125/– மற்றும் மூன்று ஆண்டு சராசரி உரிமத்தொகை காட்டிலும், ரூ.94,875/– குறைவாக உள்ளது. பேருந்துகள் ஊருக்குள் வராமல், அடிக்கடி புறவழிச்சாலையில் செல்வதால், பேருந்து வருகை அவ்வப்போது குறைவு ஏற்படுகிறது. இருப்பினும் இலாகாமூலம் வசூல் செய்தால் ரசீது அச்சுக்கூலி ரூ.25,000/–, வசூல் செய்ய 3 பணியாளர்களுக்கு ஒரு பணியாளருக்கு ரூ.356x3x365 ரூ.3,89,820/– வருடத்திற்கு மொத்தம் ரூ.4,14,820/– செலவு ஆகும். மேலும், நகராட்சி நிதி இழப்பு ஏற்படுவதை தவிர்க்கும் வகையில், மேற்கண்ட செலவினங்களை கருத்தில்கொண்டும், இந்நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லை என்பதால், இலாகாமூலம் வசூல் செய்வதை தவிர்த்து, மேற்கண்ட செலவினங்கள் இன்றி நகராட்சிக்கு நேரடியாக வருவாய் ஈட்டும் வகையில், மேற்படி திருமதி.R.விஜயலட்சுமி என்பவரின் உச்ச கேள்வியான ரூ.3,78,000/–த்தை மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண்.3166/2017/அ1)

பொருள்– 06. குளித்தலை நகராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டப்பணிகள் (1).திருச்சி மார்க்க பயணியர் நிழற்குடை மற்றும் (2).பெரியபாலம் பகுதியில் உயர் மின்கோபுர விளக்கு ஆகியவற்றை திறந்து வைக்கும் அரசு விழாவிற்கு மாண்புமிகு அமைச்சர் 27.01.2018 தேதியன்று வருகை புரிவதால், இரண்டு இடங்களில் ஒலிபெருக்கிகள் அமைக்கப்பட்டது. அதற்கான செலவினம் ரூ.3000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). அனுமதிக்கலாம்.
2). ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதிபெற்று மின் கம்பியாளர் திரு.க.ராஜேந்திரன் அவர்களுக்கு தொகை வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.1965/2017/இ1)

பொருள்– 07. குளித்தலை நகராட்சியின் முக்கியத்துவம் வாய்ந்த சுங்கவாயில் மற்றும் பேருந்து நிலையம் பகுதிகளில் சோடியம் உயர்கோபுர மின்விளக்குகள் உள்ளது. அவற்றின் 6 மின்விளக்குகள் எரியாததை சரிசெய்ய தேவையான மின் உபகரணங்கள், பொங்கல் பண்டிகை காரணமாக அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று வாங்கப்பட்டது. தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15.ன்கீழ் ரூ.60,400/– பொது நிதியிலிருந்து செலவினம் மேறகொண்டதன் விபரம் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.3456/2017/இ1)

<u>குளித்தலை நகராட்சி</u>

20.03.2018.ஆம் தேதிய அவசரக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 46 | அனுமதிக்கப்பட்டது. |
| 2 | 2 | 47 | அலுவலக குறிப்பு ஏற்று ஊர்ஜிதம் செய்யப்பட்டது. |
| 3 | 3 | 48 | அலுவலக குறிப்பு ஏற்று ஊர்ஜிதம் செய்யப்பட்டது. |
| 4 | 4 | 49 | அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் வழங்கப்பட்டது. |
| 5 | 5 | 50 | அலுவலக குறிப்பு ஏற்று ஒப்புதல் வழங்கப்பட்டது. |
| 6 | 6 | 51 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 7 | 7 | 52 | பதிவு செய்யப்பட்டது. |

ஒம்/– அ.வ.சையத் முஸ்தபா கமால்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.